பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 04 செவ்வாய்க்கிழமை 20.07.2021 கதிர் 123

# மேலும் 191 பேர் நேற்றுக் கைது!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 191 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ☞2

## மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளால்

# கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை தோற்கடிப்பு




## ஆதரவு 61; எதிர்ப்பு 152

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளால் இன்று தோற்கடிக்கப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 61 வாக்குகளும், எதிராக 152 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் 91 மேலதிக வாக்குகளால் பிரேரணை மண்கவ்வியது. ☞2

# சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி யாழ். மாநகரில் தனிநபர் போராட்டம்



(இ.கலையமுதன்)

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகமவைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் தனிநபர் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக மலையகத்தைச் சேர்ந்த ஒருவர் இன்று காலை முதல் இவ்வாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார். ☞2

# நல்லூர் பிரதேச சபையில் இன்று முன்னணி – ஈ.பி.டி.பி. முரண்பாடு

யாழ்.,நல்லூர் பிரதேச சபையில் தமிழ்த் தேசிய முன்னணியும் ஈ.பி.டி.பியும் இன்று கருத்து மோதலில் ஈடுபட்டன.

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் சபையின் தவிசாளர் மயூரன் தலைமையில் இன்று இடம்பெற்றது. கூட்டத்தில் ☞2

# வடக்கின் பிரதம செயலாளராக வவுனியா அரச அதிபர் நியமனம்

## 9 மாகாணங்களுக்கும் சிங்களவர்கள் பதவியில்





(ந.லோகதயாளன்)

இலங்கையின் 9ஆவது மாகாணத்துக்கும் சிங்களவர் ஒருவர் பிரதம செயலாளராக இன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் தற்போதைய அரச அதிபரான எஸ்.எம்.சமன் பந்துலசேனாவே வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளராகப் பணியாற்றிய அ.பத்திநாதன் கடந்த 4ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுச்சென்ற ☞2

# கல்வி அமைச்சர் பீரிஸுடனான ஆசிரியர்களின் பேச்சு தோல்வி

## தொடர்கின்றது பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையில் கல்வி அமைச்சில் இன்று நடைபெற்ற பேச்சு தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இதன்காரணமாக ஆசிரியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் இணையவழிக் கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கிக் கொண்டுள்ள நிலையில், அதனைத் தொடர்வதற்கு ஆசிரியர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலம், சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை ☞2

# பருத்தித்துறையில் கசிப்பு வடிப்பதற்குரிய உபகரணங்களுடன் ஒருவர் இன்று கைது!



(இ.கலையமுதன்)

பருத்தித்துறை, வல்லிபுரக்குறிச்சியில் கசிப்பு வடிப்பதற்கான கோடா மற்றும் கசிப்பு வடிப்பதற்குரிய உபகரணங்களுடன் ஒருவர்இன்றுகைதுசெய்யப்பட்டுள்ளார்.

மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்குக் ☞2

# வடமராட்சியில் அதிகரிக்கும் தொற்று; தீருவிலிலும் 13 பேருக்கு கொரோனா

(இ.கலையமுதன்)

யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறை தீருவில் கிராம அலுவலகர் பிரிவில் 13 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை – ஆதிகோவிலடி கிராமத்தில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தீருவில் கிராமத்தில் நேற்று எழுமாறாக 100 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகளில் 13 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிபடுத்தப்பட்டுள்ளது. ☞2



## கல்வி அமைச்சர்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்வைத்து ஆசிரியர்கள் கடந்த 12ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, தமது கோரிக்கைகளை வலியுறுத்தி நாட்டின் சில பகுதிகளில் ஆசிரியர் சங்கங்களால் இன்றும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

## வடமராட்சியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வல்வெட்டித்துறை வடமேற்கு கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நாவலடி மற்றும் தீருவில் ஆகிய கிராமங்களிலும் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் வல்லிபுரக்குறிச்சிப் பகுதியில் சுமார் 65 லீற்றர் கோடா மற்றும் உபகரணங்களை மறைத்து வைத்திருந்த வேளையில் பருத்தித்துறை மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கம்மன்பிலவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நேற்றும் இன்றும் சபையில் விவாதம் நடைபெற்றது. ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் உரையாற்றினர். விவாதத்தின் முடிவில் இன்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அரசும் அதன் தோழமைக்கட்சிகளும் கம்மன்பிலவுக்கு சார்பாக வாக்களித்தன.

அண்மையில் இலங்கையில் எரிபொருள் விலையேற்றம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு ஆளும் தரப்புக்குள்ளேயே கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டன.

இவ்வாறான பின்னணியில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கின் பிரதம.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. இவ்வாறு காணப்பட்ட வெற்றிடத்துக்கு வடக்கைச் சேர்ந்த பலரும் போட்டியிட்டனர்.

அதிலும் குறிப்பாக நேர்முகத் தேர்வில் 95 புள்ளிகளைப் பெற்று ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார் இதோ திங்கட்கிழமை (கடந்த வாரம்) பதவியேற்பார் எனச் செய்திகள் வெளிவந்தபோதும் தற்போது தமிழ்பேசும் மக்கள் 90 வீதம் வாழும் மாகாணத்துக்கும் ஒரு சிங்கள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரே பிரதம செயலாளராக நியமிக்கப்படுகின்றமை வடக்கிலுள்ள அதிகாரிகள் மத்தியில் பெரும் விரக்தி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

## மேலும் 191.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்படி தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இது வரை கைதுசெய்யப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 51 ஆயிரத்து 185 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் பகுதிகளில் வைத்து 2 ஆயிரத்து 966 வாகனங்களில் வந்த 6 ஆயிரத்து 615 பேர் நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் அனுமதியின்றி மாகாணங்களைக் கடந்துச் செல்ல முற்பட்ட 276 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## சிறுமியின் மரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனது தங்கையின் இறப்புக்கு நீதி வேண்டும், தவறுசெய்த அனைவரையும் உடன் கைதுசெய்ய வேண்டும், ஜனாதிபதி இந்த உயிரிழப்பு தொடர்பாக நேரடியாகத் தலையிட்டு சிறுமியின் இறப்புக்கு நீதி பெற்றுத்தர வேண்டும், சிறுமியின் மரண விசாரணை அறிக்கை நேரடியாக ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

## நல்லூர் பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் – அரியாலை கிழக்கு, காரைமுனங்கு மயானத்தில் உக்காத கழிவுகள் கொட்டப்பட்ட விவகாரம் தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

விவாதத்தின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – ஈ.பி.டி.பி உறுப்பினர்களுக்கு இடையே கருத்து மோதல் இடம்பெற்றதன் காரணமாக சபையில் சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் செ.சிவலோசன் குறித்த விடயம் தொடர்பில் உரையாற்றும்போது,

அந்த மயானத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திலேயே உக்கக்கூடிய கழிவுகளை கொட்டி மயானப் பகுதியை உயர்த்தும் முகமாகவே சபையினால் உக்கக்கூடிய கழிவுகள் கொட்டப்பட்டன.

எனினும், நல்லூர் பிரதேச சபையை சேர்ந்த சில கட்சிகளின் உறுப்பினர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அந்த இடத்துக்குச் சென்று மக்களை குழப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அபிவிருத்தித் திட்டங்களை குழப்பும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். தமக்கு தவிசாளர் பதவி கிடைக்காதமையால் இவ்வாறு குழப்பும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள். கடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிக்காலத்தில் நல்லூர் பிரதேச சபையினால் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை.

எனினும், தற்போது த.மயூரன் தவிசாளராக பொறுப்பேற்ற பின்னர் பிரதேச மட்டங்களில் அபிவிருத்தி செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது. அதனை விரும்பாத சில கட்சிகளின் உறுப்பினர்கள் அதனைக் கெடுக்கும் முகமாக மக்களை தூண்டிவிட்டு அரசியல் காழ்ப்புணர்ச்சியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்த மயானத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் உக்கக்கூடிய கழிவுகளை மாத்திரமே அந்த இடத்தில் கொட்டுவதற்கு சபையின் அனுமதியுடன் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது – என்றார்.

இதற்குப் பதிலளித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர், தாம் அவ்வாறான கீழ்த்தரமான செயற்பாட்டில் ஈடுபடுவது இல்லை எனவும், ஒரு சில கட்சிகளின் உறுப்பினர்கள் அவ்வாறு இருந்தாலும் தாங்கள் அவ்வாறு அரசியல் செய்யவில்லை எனவும் தெரிவித்தார்.

குறித்த விவாதம் இடம்பெற்றபோது சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000 மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## சிறுவருக்கு நீதி கேட்போம்!

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிப் பெண்ணாக வேலை செய்த சிறுமியின் மரணம் பல அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. அரசியல் ரீதியான நெருக்கடிகளையும் உருவாக்கியிருக்கின்றது.

ரிஷாத் பதியுதீன் எம்.பி. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்இரண்டுமாதங்களாகத்தடுப்புக்காவலில்வைக்கப்பட்டுள்ளார்.

அவரது வீட்டில் பணி புரிந்த இந்த 16 வயதுச் சிறுமி கடந்த ஜூலை 3 ஆம் திகதி எரிகாயங்களுடன் தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த 15 ஆம் திகதி அந்த எரிகாயங்கள் காரணமாக உயிரிழந்திருக்கின்றார்.

பத்து நாள்களுக்கு மேல் அவர் ஆஸ்பத்திரியில் இருந்திருக்கிறார். எனவே இந்த மரணத்தின் பின்னர் புதைந்து கிடக்கும் மர்மங்களை வெளியே கொண்டுவருவது பொலிஸாருக்கும் புலனாய்வாளர்களுக்கும் தலையிடி தரும் விடயமாக இருக்கப்போவதில்லை.

நடந்தது கொலையா, தற்கொலையா, தற்கொலைக்குப் பலவந்தமாகத் தூண்டப்பட்ட பின்னணியா என்பவை எல்லாம் சட்ட விசாரணையில் துலக்கப்படவேண்டிய விடயங்கள்.

எனினும் இதற்கு அப்பால் சிறுவர், சிறுமியர் வேலைக்கு அமர்த்தல் தொடர்பான ஒரு நியம முறைமையை நீதி தவறாது பின்பற்றுவதற்கான எச்சரிக்கை மணியை இந்தச் சம்பவம் ஒலித்திருக்கின்றது.

பதினைந்து வயது தாண்டிய பெண்ணை சிறுமி என்பதா அல்லது யுவதி என்பதா என்ற குழப்பம் கூட இன்னும் நீடிக்கின்றது.

இந்தச் சிறுமி கடந்த நவம்பர் மாதம்தான் ரிஷாத் எம்.பியின் வீட்டுக்குப் பணிப்பெண்ணாகச் சென்றிருக்கிறார்.

ஆனால் பணிக்கு அமர்த்துவதற்கான ஆகக்குறைந்த வயதெல்லை இந்த ஜனவரியில் இருந்துதான் 14 வயதில் இருந்து 16 வயதாக உயர்த்தி சட்டரீதியாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

அதன்படி பார்த்தால் கடந்த நவம்பரில் இந்தச் சிறுமி பணிக்கு அமர்த்தப்பட்ட போது சட்ட வயதெல்லை தவறு இல்லாவிட்டாலும், ஜனவரியில் புதிய சட்ட ஏற்பாடு நடைமுறைக்கு வந்ததும் நிலைமை தலைகீழாகியிருக்கின்றது என்று தெளிவு.

பதினாறு வயது வரைக் கட்டாயக் கல்வி முக்கியம் என்ற பின்புலத்தில்தான் பணிக்கு அமர்த்துவதற்கான ஆகக்குறைந்த வயதெல்லை 14இலிருந்து 16 ஆக உயர்த்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அதேசமயம், பதினாறு முதல் பதினெட்டு வயதுள்ளோர் அவர்களின் உயிருக்கும் வாழ்வுக்கும் எந்த ஆபத்தும் இல்லாத பணிகளில் மட்டுமே அமர்த்த முடியும் என்றும் சட்டம் கூறுகின்றது.

மேலும் இந்தச் சிறுமியின் பிரேத பரிசோதனை அறிக்கையில் அதிர்ச்சி தரும் விடயங்கள் வெளிப்பட்டன எனவும் கூறப்படுகின்றது. அச்சிறுமி பாலியல் ரீதியில் தொந்தரவு செய்யப்பட்டிருக்கின்றாள் என்பதற்கான முதல்கட்டத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது வறுமையையும் நலிவையும் பயன்படுத்தி சிறுமிகளைப் போகப்பொருளாக நுகரும் ஒரு கலாசாரத்தின் பிரதிபலிப்பா என்ற கேள்வி எழுகின்றது.

இலங்கையில் – குறிப்பாகக் கிழக்கிலும் தெற்கிலும் – இஸ்லாமிய வர்த்தக நிறுவனங்கள், ஆடைத் தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் தமிழ் சிறுமிகள், யுவதிகள் – குறிப்பாக வலிமையான பின்புலம் பலமற்ற மலையக தமிழ்ச் சிறுமிகள், யுவதிகள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர் என்ற பெயரில் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்ற தகவல் சமூக ஊடகங்களில் பரவி வருகையிலே இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கின்றது.

சமூக ரீதியாக – இன ரீதியாக – அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட நமது மலையக சமூகம் இப்போதுதான் கல்வியறிவு மற்றும் வசதி, வாய்ப்புகள் பெற்று மேம்பட்டு வருகின்றது.

அந்தச் சமூகத்தின் இளம் சிறுவர், சிறுமியர்களைக் கல்வி கற்கவும் வாய்ப்பளிக்காமல், அந்தச் சமூகம் மேம்படவும் இடமளிக்காமல் – சிறுவருக்கு வேலை என்ற கொத்தடிமைத் திட்டத்துக்குள் அவர்களை உள்ளடக்கும் கேவலப் போக்கில் இருந்து நமது இலங்கைச் சமூகம் வெளியில் வந்தால்தான் சமூக நீதி பிறக்க முடியும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பதியுதீனுக்கு நெருக்கடியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அல்லாமல், இதுபோன்ற சம்பவங்கள் சமூகத்தில் இடம்பெறாமல் நிரந்தரமாகத் தடுக்க வழி காண வேண்டும்.

இந்தச் சிறுமி போல், உள்ள நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பு என்ற பெயரில் சிக்குண்டிருக்கும் நமது பிள்ளைகளை மீட்டு, சாதாரண, சமூக வாழ்வுக்குள் அவர்களைத் திருப்பி விடவும் நாம் முயற்சி எடுக்க வேண்டும். அது சமூகத்தின் பிரதான கடப்பாடுகளில் ஒன்று என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

# குர்பான் நடவடிக்கைகளைத் தடுக்க அரசு மேற்கொண்ட நாடகமே மாடு அறுப்புத் தடை

## இம்ரான் எம்.பி. தெரிவிப்பு



ஹஜ் பெருநாள் குர்பான் நடவடிக்கைகளைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நாடகமே மாடறுப்பை தடை செய்யுமாறு அமைச்சின் செயலாளர் அனுப்பியுள்ள கடிதம் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்– தற்போதுள்ள சூழ்நிலையில் இந்த அரசுக்குத் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பல பக்கம் அழுத்தங்கள் காணப்படுகின்றன. அவர்களின் வெளிநாட்டுக் கொள்கையால் கடனை செலுத்த முடியாமல் தவிக்கின்றனர்.

மற்றொரு பக்கம் இனவாதத்தைக் கொண்டு பொய்களைக் கூறி ஆட்சிக்கு வந்த இவர்கள் கூறிய பொய்களை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். இதனால் இவர்களை ஆட்சிக்குக் கொண்டுவந்த கடும்போக்கு அமைப்புகளே அரசுக்கு எதிராகக் களமிறங்கியுள்ளனர்.

இவ்வாறு பல பக்க அழுத்தங்களை எதிர்கொள்ளும் அரசு, இந்த அழுத்தங்களிலிருந்து விடுபட தமக்கு எதிராக உள்ள கடும்போக்கு அமைப்புக்களை அமைதிப்படுத்த மேற்கொண்டுள்ள முயற்சியே மாடறுப்புத் தடை தொடர்பாக அமைச்சின் செயலாளர் அனுப்பியுள்ள கடிதம். இதன்மூலம் அடுத்தவார ஹஜ்ஜுப்பெருநாள் நாள்களில் முஸ்லிம்கள் மேற்கொள்ளும் குர்பான் நடவடிக்கைகளைக் குழப்பவே அரசு முயற்சிக்கிறது.

இந்த சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். அதன்பின்னரே இந்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு குறித்த அமைச்சுக்கு உள்ளது.

ஆனால் இவர்கள் வர்த்தமானியில் வெளியிட்டவைகளையே இன்னமும் நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கின்றனர். ஆனால் வர்த்தமானியில் வெளியிடப்படாத ஒன்றை நடைமுறைப்படுத்த முயற்சிப்பது வேடிக்கையாக உள்ளது.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத விடயத்தை நடைமுறைப்படுத்த அமைச்சின் செயலாளருக்கு எந்த அதிகாரமுமில்லை. ஆகவே இது தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்களாகிய நாம் நாடாளுமன்ற அமர்வில் பேச எதிர்பார்த்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

# கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க மனோ அணி முடிவு



அமைச்சர் உதய கம்மன்பிலவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்துள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில், இன்று மாலை 5.30 மணிக்கு வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இந்த நிலையிலேயே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மனோ கணேசன், இராதாகிருஷ்ணன், திகாம்பரம், வேலுகுமார், உதயகுமார் ஆகியோர் ஆதரவாக வாக்களிக்க தீர்மானித்துள்ளனர்.

# இனந்தெரியாதவர்களால் மோட்டார் சைக்கிள் தர்மபுரம் பகுதியில் அடித்து உடைத்து எரிப்பு

கிளிநொச்சி – புளியம்பொக்கணை பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை, இனந்தெரியாத சந்தேகநபர்கள் அடித்து உடைத்து சேதமாக்கியுள்ளனர்.

குறித்த சம்பவம் முன்பகை காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில்கடந்தஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில், மற்றுமொரு குழுவினரின் மோட்டார் சைக்கிளும் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளதை அடுத்து அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.



குறித்த சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நாட்டை ஆள்பவர்கள் நேர்மை இல்லாதோர்!

## கொந்தளிக்கிறார் தேரர்

பாரத லக்ஷ்மன் கொலை வழக்கில் பிரதான குற்றவாளியான துமிந்த சில்வாவிற்கு நம் நாட்டு நீதிமன்றம் தூக்குத் தண்டனை வழங்கி சிறைக்கு அனுப்பியது.முறையாக அனைவரும் விசாரிக்கப்பட்டு, கிடைத்த அனைத்து ஆதாரங்களையும், தகுந்த சாட்சிகளையும் வைத்தே நீதிமன்றால் இந்த முடிவு இறுதியாக எடுக்கப்பட்டது.

எமக்கு தெரியும் பௌத்தம், கிறிஸ்தவம், இந்து, முஸ்லிம் என அனைத்து மதங்களிலும் கொலை செய்வது பற்றிய கருத்து பொதுவான ஒன்றாகவே காணப்படுகின்றது.

நாங்கள் தெரிந்தே ஒரு கொலையை செய்தால் அது மிகப்பெரிய பாவம். இதுவே அனைத்து மதத்தினதும் பொதுவான கருத்து.

அதையே தான் சட்டமும் பார்க்கின்றது. அதைவைத்து தான் பாரத லக்ஷ்மன் உட்பட மற்றும் அவரோடிருந்த ஏனையோரையும் துமிந்த சில்வா தெரிந்தே, வேண்டுமென்றே கொலை செய்தார் என்று முடிவுக்கு வந்து இறுதித் தீர்ப்பையும் நீதிமன்றம் வழங்கியது என தேரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# டெல்டா வகை கொரோனா வைரஸ் 100 இற்கு மேற்பட்ட நாடுகளில்



கொரோனா வைரஸ்சுகளை விட இந்த டெல்டா வகையானது மிக விரைவாக பரவி வருகிறது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசியாவுக்கான மண்டல இயக்குநரான மருத்துவர் பூனம் கேத்ரபால் சிங் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசினார்.

அவர் கூறுகையில், டெல்டா வகை கொரோனா 100இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பரவியுள்ளது.

அதன் பரவல் மிக விரைவில் சர்வதேச அளவில் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தும் கொரோனா வகையாக ஆகக்கூடும். அனைத்து வகையான கொரோனா வைரஸ்களை விட இந்த டெல்டா வகையானது மிக விரைவாக பரவிவருகிறது என அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் கொவேக்ஸ் திட்டத்தின் வழியே 75 லட்சம் மாடர்னா வகை கொரோனாத் தடுப்பூசி டோஸ்கள் இந்தியாவுக்கு வழங்கப்பட உள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

## சீன ஆய்வுக் கூடத்தில் விபரீதம்:

# குரங்கில் இருந்து பரவிய வைரஸ் தாக்கி ஊழியர் சாவு



சீனாவில் பரவிய கொரோனா நோயால் மக்கள் கடும் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் நிலையில் குரங்கிடம் இருந்து பரவிய வைரஸால் ஒருவர் பலியாகி இருப்பது அடுத்த அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

சீனாவில் பரவிய கொரோனா வைரஸ் இன்று உலகம் முழுவதும் பரவி மக்களை வாட்டி வதைத்து வருகிறது. அந்த வைரஸ் விலங்குகளிடம் இருந்து மனிதனுக்கு பரவியதாக கருதப்படுகிறது.

இந்த நிலையில் குரங்கிடம் இருந்து மனிதனுக்கு பரவிய ஒருவகை வைரஸால் வன விலங்கு ஆய்வுக்கூட ஊழியர் பலியாகி இருக்கிறார்.

கடந்த மார்ச் மாதம் 2 குரங்குகள் திடீரென இறந்துவிட்டன. அவற்றை விலங்கு ஆய்வுக்கூடத்தில் பிரேத பரிசோதனை செய்தனர். அப்போது அதில் 53 வயது ஊழியர் ஒருவரும் பங்கேற்றார். சில நாட்கள் கழித்து அவருக்கு உடல் நிலை கோளாறு ஏற்பட்டது. அவரை சோதித்த போது அவரது உடலில் 'பீ வைரஸ்' எனும் குரங்குகளை தாக்கும் ஒருவகை வைரஸ் பரவி இருந்தது தெரிய வந்தது.

பல்வேறு ஆஸ்பத்திரிகளிலும் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனாலும் உடல்நிலை தேறவில்லை. இதையடுத்து கடந்த மே மாதம் 27ஆம் திகதி அவர் உயிரிழந்தார். இந்த தகவல் இப்போதுதான் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே சீனாவில் பரவிய கொரோனா நோயால் மக்கள் கடும் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் நிலையில் குரங்கிடம் இருந்து பரவிய வைரஸால் ஒருவர் உயிரிழந்திருக்கின்றமை அடுத்த அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.



# தடுப்பூசி செலுத்திய வெளிநாட்டவர்களுக்கு கனடாவில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன

செப்டெம்பர் 7ஆம் திகதிக்குப் பிறகு தடுப்பூசி செலுத்திக் கொண்ட அனைத்து வெளிநாட்டினருக்கும் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன என கனடா அரசு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பெருந்தொற்று காரணமாக கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் அமெரிக்காவுடனான தரைவழி மற்றும் வான்வழி பாதையை கனடா மூடிவைத்து இருந்தது.

இந்நிலையில், கொரோனாத் தடுப்பூசி முழுமையாக போட்டுக்கொண்ட அமெரிக்கர்கள் வரும் ஓகஸ்ட் 9ஆம் திகதி முதல் கனடா வருவதற்கு எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வரும் செப்டெம்பர் 7ஆம் திகதிக்குப் பிறகு தடுப்பூசி போட்டுக் கொண்ட அனைத்து வெளிநாட்டுப் பயணிகளுக்கும் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன எனகனடா அரசு அறிவித்துள்ளது. ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு கனடா, அமெரிக்காவுடனான எல்லையை திறக்க உள்ளது.

# அமேசான் நிறுவனத்தின் ஜெப் பெசோஸ் இன்று விண்வெளிக்குப் பயணமாகிறார்

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து இன்று விண்வெளி சுற்றுலா செல்ல உள்ள அமேசான் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஜெப் பெசோஸ்,(Jeff Bezos) தன்னோடு வருபவர்கள் ரிலாக்சாக அமர்ந்து ஜன்னல் வழியாக விண்வெளி அழகை ரசிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

உலகப் பணக்காரர்களுள் ஒருவரான ஜெப் பெசோஸ் (Jeff Bezos) குறைந்த கட்டணத்தில் விண்வெளி சுற்றுலாவை சாத்தியப்படுத்தும் முயற்சியாக புளூ ஆர்ஜின் (Blue Origin) நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

கடந்த 11ஆம் திகதி, பிரிட்டன் கோடீஸ்வரரான ரிச்சர்ட் பிரான்சன் விண்ணில் 90 கிலோமீற்றர் பயணித்த நிலையில், ஜெப் பெசோஸ் தன் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட New Shepherd விண்கலத்தில் இன்று 100 கிலோமீட்டர் தூரம் விண்வெளி



பயணம் மேற்கொள்கிறார்.

விமானிகள் தயவின்றி தானியங்கி முறையில் இயங்கும் 60 அடி நீள விண்கலத்தில் ஜெப் பெசோஸுடன் (Jeff Bezos) அவரது சகோதரர் மார்க் பெசோஸ், 82 வயது முன்னாள் பெண் விமானி வாலி பங்க் (Wally Funk) மற்றும் ஆலிவர் டேமென் (Oliver Daemen) என்ற 18 வயது சிறுவன் ஆகியோர் பயணிக்கின்றனர்.

# ஈராக் தலைநகரில் குண்டு வெடிப்பு; 28 பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு

ஈராக் தலைநகர் பாக்தாத் அருகே நடைபெற்ற பயங்கர குண்டுவெடிப்பில் பெண்கள், குழந்தைகள் உள்பட 28பேர் கொல்லப்பட்டனர். Sadr நகரம் அருகே உள்ள மார்க்கெட் பகுதியில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்துள்ளது.


இந்த சம்பவத்தில் அங்கிருந்த பெண்கள், குழந்தைகள் உள்பட 28பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

வெடிகுண்டு தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. சம்பவம் குறித்து ஈராக் பாதுகாப்பு அமைச்சகம் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

# பயணிகள் பஸ் –லொறி மோதல்

## 30 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானில் பஸ்ஸும் லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் 30 பேர் உயிரிழந்தனர். பஞ்சாப் மாகணத்தில் உள்ள தேரா காசி கான் என்ற இடத்தில் பக்ரீத்தைக் கொண்டாட தொழிலாளர்கள் பஸ் ஒன்றில் பயணம் செய்தனர்.

அந்தப் பேருந்து சியால்கோட் என்ற இடத்திலிருந்து ராஜன்பூர் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, எதிரே வந்த லொறியுடன் மோதி சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் நிகழ்விடத்திலேயே 18 பேர் உயிரிழந்தனர்.

மேலும் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் அடுத்தடுத்து சிலர் மரணித்ததால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்தது. பஸ் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 40இற்கும் மேற்பட்டவர்கள் படு காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



# கைப்பேசிகள் ஒட்டுக்கேட்பு விவகாரம்; பா.ஜ.க.– காங்கிரஸ் மோதல் வலுக்கிறது

எதிர்க்கட்சித் தலைவர்களின் கைப்பேசிகள் உளவு பார்க்கப்பட்டன என கூறப்படுவதை பா.ஜ.க. தலைவரும் இந்திய உள்துறை அமைச்சருமான அமித்ஷா மறுத்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுச் சம்பந்தமாக அமித்ஷா ஓர் அறிக்கையைவெளியிட்டுள்ளார். அதில் அவர், ‘கைப்பேசிகள் உளவு பார்க்கப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம், உலக அரங்கில் இந்தியாவைச் சிறுமைப்படுத்த விரும்பும் சிலரால் ஊதிப் பெரிதாக்கப்பட்டுள்ளது. இது, சீர்குலைப்பாளர்களால், இடையூறு செய்வதையே தொழிலாகக்கொண்டவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட தகவலாகும்.

இந்தச் சதித்திட்டங்களால் இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தைச் சீர்குலைக்க முடியாது. சுக்கான் இல்லாத கப்பலான காங்கிரஸ் கட்சி, இதில் மூக்கை நுழைப்பது எதிர்பார்த்ததுதான். அவர்கள் ஜனநாயகத்தை காலில் போட்டு மிதித்துப்பழக்கப்பட்டவர்கள். ஆனால், தேசத்தின் நல்வாழ்வுதான் மோடி அரசின் முன்னுரிமை. எனவே, எந்தப் பிரச்சினை குறுக்கிட்டாலும், அந்த இலக்கை எட்ட நாம் பாடுபடுவோம்’ என்று தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையே, இந்த விவகாரத்தில் பா.ஜனதா – காங்கிரஸ் கட்சிகளுக்கிடையே கடுமையான வார்த்தை மோதல் ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் தலைமைச் செய்தித் தொடர்பாளர் ரந்தீப் சுர்ஜேவாலா நிருபர்களோடு உரையாடியபோது, ‘இந்த உளவு வேலைக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாதான் பொறுப்பு. அவர் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும். மேலும், பிரதமர் மோடியின் பங்கு குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்!’ என்று வலியுறுத்தியிருக்கிறார். மல்லிகார்ஜுன கார்கே, ஆதிர் ரஞ்சன் சவுத்ரி ஆகியோரும் இதே கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்தக் கருத்துகளுக்கு பா.ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ரவிசங்கர் பிரசாத் பதில் அளித்துள்ளார். ‘காங்கிரஸ் கட்சியின் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை திட்டவட்டமாக மறுக்கிறோம். காங்கிரஸ் இந்த அளவுக்கு கீழறங்கி இருப்பது கண்டிக்கத்தக்கது. இந்தப் பிரச்சினையை கிளப்பிய ‘தி வயர்’ என்ற செய்தி இணையத்தளம், கடந்த காலத்தில் வெளியிட்ட செய்திகளும் தவறாகத்தான் இருந்துள்ளன. அம்னஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பானது, எப்போதும் இந்தியாவுக்கு எதிராகவே செயல்பட்டுள்ளது. நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நடக்கும் நேரத்தில் அதைச் சீர்குலைப்பதற்காக அடிப்படையற்ற பிரச்சினையை இவர்கள் கிளப்புகிறார்கள்’ என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# கொரோனா மரண எண்ணிக்கை 500இனை விடக் குறைந்தது

## கடந்த 3 மாதங்களில் அதிகுறைந்த எண்ணிக்கை

இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலையின் வேகம் தணிந்து வருகிறது என்று தரவுகள் தெரிவிக்கின்றன. கேரளா, மராட்டியம் உள்பட 5 மாநிலங்களில்தான் தினசரி கொரோனாப் பாதிப்பு சற்று அதிகமாக உள்ளதாக அந்தத் தரவுகளின் மூலம் அறியமுடிகிறது.

இந்த நிலையில், நேற்றுக் காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில், இந்தியா முழுவதும் புதிதாக 38 ஆயிரத்து 164 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய நாளான ஞாயிற்றுக்கிழமை 41 ஆயிரத்து 157 பேருக்கும், சனிக்கிழமை 38 ஆயிரத்து 79 பேருக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டு இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டது.

கடந்த சனிக்கிழமை 19 லட்சத்து 36 ஆயிரம் மாதிரிகளில் கொரோனாப் பரிசோதனை நடத்தப்பட்டிருந்தது. ஆனால், கடந்த ஞாயிற்றுக்கிழமை 14 லட்சத்து 63 ஆயிரத்து 593 மாதிரிகளில்தான் பரிசோதனை நடத்தப் பட்டது. அதில்தான், 38 ஆயிரத்து 164 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டது.

இத்துடன், கொரோனா மொத்தப் பாதிப்பு 3 கோடியே 11 லட்சத்து 44 ஆயிரத்து 229 ஆக உயர்ந்துள்ளது. தினசரிப் பாதிப்பு எண்ணிக்கை 2.61 சதவீதமாகவும், வாராந்திர பாதிப்பு கணக்கு 2.08 சதவீதமாகவும் பதிவாகி உள்ளன. தொடர்ந்து 28 நாள்களாக இது 3 சதவீதத்தை விடக் குறைவாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொரோனாவில் இருந்து குணமடைந்தவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்தபடியே உள்ளது. 3 கோடியே 3 லட்சத்து 8 ஆயிரத்து 456 பேர் குணமடைந்துள்ளனர். இது, மொத்தப் பாதிப்பில் 97.32 சதவீதமாகும்.

கொரோனா பாதிப்புத்தரவுகளில் குறிப்பிடத்தக்க திருப்பமாக, 24 மணி நேரத்தில் பலியானவர்கள் எண்ணிக்கை 500 இற்குக் கீழே வந்துள்ளது. முந்தைய நாளில் 518 பேர் பலியான நிலையில், நேற்று இது 499 ஆகக் குறைந்துள்ளது. கடந்த 3 மாதங்களில் இந்தியாவில் இதுதான் மிகக்குறைந்த பலி எண்ணிக்கையாகும். உயிரிழப்பு வீதம் தற்போது 1.33 சதவீதமாக உள்ளது. மராட்டியத்தில் 180 பேரும், கேரளாவில் 81 பேரும் பலியானார்கள். மொத்தப் பலி எண்ணிக்கை 4 லட்சத்து 14 ஆயிரத்து 108 ஆக அதிகரித்துள்ளது. மராட்டியத்தில் மட்டும் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 31 பேர் பலியாகி உள்ளனர் என்று இந்திய மருத்துவத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# கொரோனாவுக்குப் பயந்து ஒன்றரை ஆண்டுகள் வீட்டுக்குள்ளேயே முடங்கியிருந்த குடும்பம்

ஆந்திர மாநிலத்தின் கிழக்கு கோதாவரி மாவட்டம் ராஜோலு கிராமத்தைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளி ஒருவரும் அவரது மனைவி மற்றும் ஒரு ஆண், இரண்டு பெண் பிள்ளைகளும் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தமை தெரியவந்துள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவியபோது தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் கதவை உள்பக்கமாக பூட்டிக் கொண்டு வீட்டுக்குள்ளேயே அவர் முடங்கியிருந்திருக்கிறார். கொரோனாத் தொற்று ஏற்பட்டு இறந்து விடுவோமோ என்ற பயத்தில் வீட்டைக்கூடத் திறக்காமல் அக்கம் பக்கத்தினர் யாருடனும் பேச்சு வைத்துக் கொள்ளாது இருந்துள்ளனர். அவ்வப்போது அவருடைய மகன் மட்டும் வீட்டில் இருந்து வெளியே வந்து ரேஷன் கடையில் பொருள்களை வாங்கிச்சென்றிருக்கிறார். வீட்டில் இருந்து வெளியே வரும் அவரது மகனும் யாருடனும் பேசுவதில்லை எனக் கூறப்படுகிறது. இந்த நிலையில் அவருக்கு முதலமைச்சரின் வீட்டுத் திட்டத்தில் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக கிராமப் பஞ்சாயத்துச் செயலாளர் மற்றும் ஊழியர்கள் அவரது வீட்டுக்குச் சென்றுள்ளனர். வீடு கட்டும் திட்டத்தில் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறித்துத் தெரிவித்து, அதற்கான படிவத்தை பூர்த்தி செய்து கையெழுத்திட்டுத் தருமாறும் கேட்டுள்ளனர். ஆனால் அவர்களோ, ‘வீட்டை விட்டு வெளியே வந்தால் கொரோனா வந்து விடும் என்பதால் வெளியே வர முடியாது’ என திட்டவட்டமாகக் கூறி கதவை திறக்க மறுத்து விட்டனர். இதையடுத்து அதிகாரிகள் காவல்துறையில் புகார் தெரிவித்தனர்.

காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து கதவை உடைத்து உள்ளே சென்றபோது அவர்களுக்கு வீட்டுக்குள் அதிர்ச்சி காத்திருந்திருக்கிறது வீட்டுக்குள்ளேயே முடங்கிய ஐவரதும் ஆரோக்கியம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, அவர்கள் மிகவும் உடல் மெலிந்தும் காணப்பட்டனர். இதையடுத்து அவர்களை வலுக்கட்டாயமாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சேர்த்துள்ளனர். இந்தச் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.





# படமெடுத்த தூத்துக்குடி தொழிலாளிக்கு இந்தியக் கடற்படை வலைவீச்சு

இந்தியாவின் தென் தமிழக எல்லைக்கு இந்தியக் கடற்படை தனது நீர்மூழ்கிக் கப்பலை நகர்த்தியிருப்பதாக செய்திகள் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த விவகாரம் தொடர்பாக இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் தகவல் எதனையும் வெளியிட மறுத்துவிட்டது. எனவே, இந்தச் செய்தியின் உண்மைத் தன்மையை அறிவதற்கு ஊடகங்களும் சர்வதேச நாடுகளும் ஆர்வம் காட்டி வருகின்றன.

இந்த நிலையில் குறித்த செய்தியும் அதனோடு தொடர்புடைய தகவல்களும் வெளியே கசிந்தது தொடர்பான வழிமுறைகளைக் கண்டறிவதற்கு இந்தியக் கடற்படை தீவிரமான விசாரணைகளில் இறங்கியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. குறித்த துறைமுகப் பகுதியில் பணியிலிருந்த ஊழியர்கள் யாரேனும் தான் செய்தியையும் படத்தையும் வெளியே பரவவிட்டிருக்க வேண்டும் என்ற கோணத்தில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பக்ரீத் கொண்டாட்டத்துக்கு கேரளாவில் தளர்வு; உத்தரப்பிரதேசத்தில் கட்டுப்பாடுகள்

பக்ரீத் பண்டியை முன்னிட்டு கேரளாவில் 19 ஆம் திகதி முதல் மூன்று நாள்களுக்கு தளர்வுகள் அறிவிக்கப்படுகின்றன என கேரள மாநில அரசு அறிவித்தது. ஆனால், கேரள அரசின் இந்த முடிவுக்கு இந்திய மருத்துவர் சங்கம் கண்டனம் தெரிவித்திருந்தது. இதற்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டிலும் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனு தொடர்பாக பதிலளிக்க கேரள அரசுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில் உத்தரப்பிரதேசத்தில் பக்ரீத் கொண்டாட்டங்களின்போது பொது இடங்களில் 50 பேருக்கு மேல் கூட்டமாக இருக்கக்கூடாது என்று அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள் ளார். மேலும், குர்பானிக்காக மாடுகள் அல்லது ஒட்டகங்களை பலியிடக்கூடாது என்றும் பொது இடங்களில் குர்பானி நிகழ்வுகள் நடத்தப்படக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்

# களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப்பணிமனையினால் பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசிகள் ஏற்றல்



களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றப்பட்டது.

தரம் – 6 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கருப்பைகழுத்து புற்றுநோயைத் தடுப்பதற்கான தடுப்பூசி மற்றும் தரம் 7 இல் கற்கும் மாணவர்களுக்கான ஏற்பூசி ஏற்றும் பணிகள் பிரதேச பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் எஸ்.இராஜேந்திரனின் வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச்சுகாதாரப பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் ஒழுங்கமைப்பில் இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் 70 மாணவர்களுக்கு இன்றைய தினம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

தடுப்பூசி செலுத்தும் பணியில் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான எஸ்.கணேன், எஸ்.ஜீவிதன் ஆகியோர் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை காவல்துறை பிரிவுக்கு முச்சக்கர வண்டிகள் வழங்கி வைப்பு

இலங்கை அரசாங்கத்தினால் காவல்துறையினருக்கு வழங்கப்பட்ட முச்சக்கர வண்டிகளை திருகோணமலை காவல்துறை பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று திருகோணமலை தலைமையக காவல்துறை நிலையத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகர் உதய ஹேமந்த, திருகோணமலை பிராந்திய காவல்துறை அத்தியட்சகர் பிரஸன்ன பிராத்மனகே ஆகியோர் பங்கேற்று இலங்கை அரசினால் திருகோணமலை மாவட்டத்திற்காக முதற்கட்டமாக வழங்கப்பட்ட 14 முச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகர்– குறித்த முச்சக்கரவண்டிகள் அனைத்தும் கிராமப் பகுதி காவல்துறை நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசினால் வழங்கப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

அத்தோடு பாரிய வாகனங்கள் மற்றும் காவல்துறை வாகனங்கள் பயணம் செய்ய இயலாத பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் குறித்த வாகனங்களை பயன்படுத்த முடியும் எனவும் தெரிவித்த அவர் இதனை தனிப்பட்ட பயன்பாடுகளுக்காக உபயோகித்தல் மற்றும் துஷ்பிரயோகம் செய்துகொள்ள வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

# கேரளா கஞ்சாவுடன் ஒருவர் நேற்று கைது



கேரளா கஞ்சாவினை முச்சக்கரவண்டியில் கடத்திசென்றவரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு சந்திப்பகுதியில் நேற்று மதியம் கல்முனை விசேட பிரிவின் தகவலுக்கமைய இக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டி ஒன்று சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய காரைதீவு சந்திக்கு அருகில் சம்மாந்துறை பொலிஸார் தேடுதல் நடாத்தி சுமார் 43 வயதுடைய கல்முனை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரை 1 கிலோ கேரளா கஞ்சாவுடன் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதாகிய சந்தேக நபர் உட்பட அவர் பயணம் செய்த முச்சக்கரவண்டி சான்று பொருள்கள் சகிதம் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இரண்டு பேர் மட்டக்களப்பில் கைதானர்

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இருவர் மட்டக்களப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



மட்டக்களப்பு மாவட்ட விசேட பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிக்கு அமைய மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பி .எஸ்.பி பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருவப்பங்கேணி மற்றும் குமாரபுரம் பகுதிகளில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது கஞ்சா விற்பனை மற்றும் பாவனையின் ஈடுபட்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட குறித்த நபர்கள் இருவரையும் நீதிமன்ற சட்ட நடவடிக்கைகளுக்காக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தபடவுள்ளனர் என குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி பண்டார தெரிவித்துள்ளார்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் சட்டவிரோத போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனை தொடர்பில் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கே.பி. கருணாரத்னவின் பணிப்புரையின் கீழ் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு கல்முனை பிராந்தியத்திற்கு அடுத்தவாரம் 50 ஆயிரம் தடுப்பூசிகள்

கல்முனை பிராந்தியத்திற்கு அடுத்த வாரம் 50 ஆயிரம் சினோபோர்ம் கொரோனாத் தடுப்பூசிகள் அனுப்பி வைக்கப்படும் என்று சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தலைமையிலான உயர்மட்ட சுகாதார அதிகாரிகள் குழுவினர் கல்முனைக்கு விஜயம் செய்தனர்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கு. சுகுணன் தலைமையில் பிராந்திய கொவிட் 19 தொற்று தொடர்பான கலந்துரையாடல் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் எல்.பானபிட்டிய வைத்தியர் சுதத் தர்மரத்ன, கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் எ.ஆர்.எம். தௌபீக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்கு உலருணவுப் பொதிகள் வழங்கல்

*கர்ப்பிணி தாய்மார்களுக்கான போசாக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு இன்று நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.*



*மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களில் தெரிவு செய்யப்பட கர்ப்பிணி தாய்மார்களுக்கான போசாக்கு உலருணவு பொதிகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.*

*மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 வைரஸ் தொற்று பரவல் காரணமாக வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளான நிலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான கிரேஸ் லைப் லைன் தொண்டு நிறுவனத்தின் நிதி உதவியின் கீழ் இந்த அத்தியாவசிய போசாக்கு உலருணவுப் பொதிகள் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளினால் வழங்கிவைக்கப்பட்டது.*

*இந் நிகழ்வில் மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளான கே.கிரிசுதன், இ.உதயகுமார் கிரேஸ் லைப் லைன் தொண்டு நிறுவன பிரதிநிதிகள், குடும்பநல உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.*

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# ஒலிம்பிக் கிராமத்தில் கொரோனா பரவல் அதிகரிக்கிறது செக்குடியரசு, அமெரிக்க வீர, வீராங்கனைகளுக்கும் பாதிப்பு



டோக்கியோ ஒலிம்பிக் போட்டி தொடங்க இன்னும் 3 நாள்களே இருக்கும் நிலையில் அங்குள்ள ஒலிம்பிக் கிராமத்தில் கொரோனாப்பரவல் அதிகரித்து வருகிறது. ஒலிம்பிக் கிராமத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வழக்கமான பரிசோதனையில் தென்னாபிரிக்க கால்பந்து அணியின் 2 வீரர்கள் உள்பட 3 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருக்கின்றமை தெரியவந்தது. இதனையடுத்து அவர்கள்தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். இந்த நிலையில் செக்குடியரசு நாட்டைச் சேர்ந்த பீச் வொலிபால் அணி வீரர் அன்ட்ரெஜ் பெருசிக் நேற்று கொரோனாப் பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார். இதனால், அவர் பங்கேற்கும் போட்டியை தள்ளி வைக்கும்படி அந்த நாட்டு அணியின் நிர்வாகிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதேபோல் அங்குள்ள நோரிடா பகுதியில் தங்கி பயிற்சியில் ஈடுபட்ட அமெரிக்க ஜிம்னாஸ்டிக்ஸ் அணியின் வீராங்கனை ஒருவரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

வீர, வீராங்கனைகளுக்கிடையே கொரோனாப் பரவல் தீவிரமடையும் பட்சத்தில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவது மேலும் சிரமமான காரியமாக மாறும் என்று பெயர் குறிப்பிடவிரும்பாத டோக்கியோ ஒலிம்பிக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். ஒலிம்பிக்கை நடத்துவதில் உறுதியாக இருந்தால், தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களுக்குப் பதிலாக அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் கொரோனாதான் பரிசாகக் கிடைக்கும் என்று ஜப்பானிய மருத்துவர்கள் தொடர்ச்சியாக எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## ஆஸ்திரேலிய அணியின் தலைவராக அலெக்ஸ் கெரி நியமனம்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாடவுள்ள ஆஸ்திரேலிய அணியின் தலைவராக அலெக்ஸ் கெரி நியமிக்கப்பட்டுள்ளார்.

அணியின் தலைவர் ஆரோன் ஃபிஞ்சுக்குக் காயம் ஏற்பட்டதால் அவர் முதலாவது ஒருநாள் போட்டியில் பங்கேற்கமாட்டார் என கிரிக்கெட் ஆஸ்திரேலியா உறுதிப்படுத்தியதையடுத்து இவரது நியமனம் தொடர்பாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 29 வயதான அலெக்ஸ் கெரி முதல் முறையாக ஆஸ்திரேலிய அணிக்குத் தலைமைதாங்கவுள்ளார். ஆஸ்திரேலிய ஒருநாள் கிரிக்கெட் அணியின் 26 ஆவது அணித்தலைவர் என்கிற பெருமையை அவர் பெறுகிறார். இதுவரை 42 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ள அலெக்ஸ் கெரி, 4 அரைச் சதங்கள் ஒரு சதம் அடங்கலாக 1,091 ஓட்டங்களை எடுத்திருக்கிறார்.

ஆஸ்திரேலிய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசத் தொடர்களில் விளையாடுவதற்காக மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றுள்ளது. இதில் முன்னதாக நடைபெற்ற ரி-20 தொடரை 1-4 என்ற கணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் அணியிடம் ஆஸ்திரேலியா இழந்தது.

இதனைத் தொடர்ந்து ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் தொடர் இன்று பார்படோஸில் நடைபெறும் முதலாவது போட்டியோடு ஆரம்பமாகிறது.

## அயர்லாந்துடனான முதலாவது ரி-20 போட்டி 33 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றி



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அயர்லாந்துக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கு இடையேயான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனிலையில் முடிந்தது. இதையடுத்து, 3 போட்டிகள் கொண்ட ரி-20 கிரிக்கெட் தொடரில் இரு அணிகளும் விளையாடுகின்றன. இதில் முதல் ரி-20 போட்டி டப்ளினில் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற அயர்லாந்து அணி முதலில் பந்து வீச்சைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை எடுத்தது. மார்க்ரம் 39, டேவிட் மில்லர் 27 ஓட்டங்களை எடுத்தனர். அயர்லாந்து அணியின் மார்க் அடெய்ர் 3 விக்கெட்டுக்களையும் சிமி சிங், ஜோஸ் லிட்டில் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.


166 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய அயர்லாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களையே பெற்றது. தென் னாபிரிக்க அணி 33 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ஹரி டெக்டர் 36, பரி மக்கார்தி ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களை எடுத்திருந்தனர். தென்னாபிரிக்காவின் சம்சி 4 விக்கெட்டுக்களையும் லுங்கி இங்கிடி, ஜோர்ஜ் லின்டே இருவரும் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக தென்னாபிரிக்காவின் சம்சி தெரிவுசெய்யப்பட்டார். இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது ரி-20 போட்டி வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## இலங்கை - இந்தியா இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று

இலங்கை – இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டி கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் இன்று நடைபெறுகிறது.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில், ஏற்கனவே நடைபெற்ற முதல் போட்டியில் 7 விக்கெட்டுக்களால் இந்தியா வெற்றிபெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இந்த நிலையில் இன்று நடைபெறும் இப்போட்டி இரு தொடரின் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் முக்கியமான போட்டியாக அமைந்திருக்கிறது. இப்போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றால் தொடரை வென்று விடும்.



இலங்கை அணி வெற்றிபெற்றால் தொடரைச் சமநிலை செய்து வெற்றி வாய்ப்பைத் தக்கவைத்துக் கொள்ள முடியும்.



## ரி.என்.பி.எல். தொடரின் முதல் போட்டி கன மழையால் கைவிடப்பட்டது

ஐந்தாவது தமிழ்நாடு பிரிமீயர் லீக் (ரி.என்.பி.எல்.) ரி-20 கிரிக்கெட் தொடர் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் நேற்று இரவு ஆரம்பமானது. ரசிகர்கள் இன்றி அரங்கேறும் இந்தத் தொடரில் நடப்பு சம்பியன் சேப்பாக் சூப்பர் கில்லீஸ், திண்டுக்கல் டிராகன்ஸ், மதுரை பாந்தர்ஸ், திருச்சி வாரியர்ஸ் உள்பட 8 அணிகள் பங்கேற்றுள்ளன. அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை நடைபெறும் இந்தத் தொடரில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு முந்தைய 'பிளே-ஓப்' சுற்றுக்குத் தகுதி பெறும்.

நேற்றைய தொடக்க லீக் ஆட்டத்தில் கோவை கிங்ஸ் - சேலம் ஸ்பார்டன்ஸ் அணிகள் மோதிய போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற சேலம் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட கோவை அணி 18 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களை எடுத்திருந்த போது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. மைதானத்தில் நிலவிய ஈரப்பதத்தை உலர வைக்க எடுத்த முயற்சிக்கு பலன் கிடைக்காததால் இரவு 11 மணிக்கு இந்தப் போட்டி கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இன்றைய போட்டியில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணியும் திருப்பூர் தமிழன்ஸ் அணியும் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன.

# மேலதிக கொடுப்பனவுகளை வழங்கக் கோரி மன்னார் வைத்தியசாலை ஊழியர் போராட்டம்

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார சேவைகள் பணியாளர்கள் மற்றும் பரிசோதகர்கள் மேலதிக கொடுப்பனவுகளை வழங்கக்கோரி நேற்று (திங்கட்கிழமை) வைத்தியசாலை வளாகத்தில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் 60 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக பணியாளர்கள் மேற்கொண்ட நேரங்களுக்கான கொடுப்பனவை இதுவரை காலமும் தமக்கு வழங்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.



இந்த விடயம் தொடர்பாகப் பல தடவைகள் எழுத்து மூலமாகவும் தொழிற்சங்க அடிப்படையிலும் வைத்தியசாலையின் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலதிக நேர கொடுப்பனவை வழங்கக்கோரி மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியடைந்த நிலையிலேயே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர் எனப் போராட்டக்காரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதேநேரம் சரியான தீர்வு கிடைக்காத சந்தர்ப்பத்தில் போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## இரு குழுக்களுக்கு இடையில் மோதல்

### ஒருவர் சாவு

பாணந்துறை, பின்வத்த பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் எனவும் மற்றொருவர் காயமடைந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பின்வத்த, உபோசதாராம வீதியை சேர்ந்த 53 வயதுடைய ஓட்டோ சாரதியான மூன்று பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பண முரண்பாடு தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதம் நீண்டதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9.15 மணியளவில் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், கொலை செய்த நபர் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தலையில் பலத்த காயங்களுடன் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை பிரதேச குற்றப் புலனாய்வு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் பின்வத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## கொழும்பு – ஷாங்காய் விமான சேவைகள் இரு வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டன

கொழும்பில் இருந்து ஷாங்காய் செல்லும் சீனா ஈஸ்டர்ன் எயார்லைன்ஸின் விமான சேவை கள் ஜூலை 26 முதல் இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஜூலை 6 ஆம் திகதி கொழும்பிலிருந்து தென்மேற்கு சீனாவின் யுன்னான் மாகாணத்திற்கு சென்ற எம்.யு. 714 என்ற விமானத்தில் சென்ற ஆறு பயணிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இந்நிலையில் கொழும்பு - ஷாங்காய் விமான சேவைகள் இடைநிறுத்தப்படும் அதே நேரத்தில் கொழும்பு - குன்மிங் விமான சேவைகளும் அடுத்த வாரம் முதல் ரத்து செய்யப்படும் என அந்நாட்டு சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## இலங்கைக்கான மியன்மார் தூதுவர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்தார்

இலங்கைக்கான மியான்மார் தூதுவர் யு ஹன் து, வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவை சந்தித்துள்ளார்.

இதன்போது, நீண்டகால இலங்கை மியன்மார் சகோதரத்துவ இருதரப்பு உறவுகள் தொடர்பாக வலியுறுத்திய வெளிநாட்டு அமைச்சர் குணவர்தன, பல நூற்றாண்டுகளாக பௌத்தத் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றைப் பகிர்ந்து கொண்டுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

1803 மற்றும் 1865 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் அமரபுர மற்றும் ராமண்ண நிகாய முறையே நிறுவப்பட்டமை இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் சான்றுகளாகும் என அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். குறித்த கருத்துக்களை அங்கீகரித்த தூதுவர், மியன்மாரைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் தற்போது இலங்கையில் கல்வி கற்று வருகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் உறவுகள் பல ஆண்டுகளாக பல்வேறு வழிமுறைகள் மூலம் பலனளிப்பதாக இரு பிரமுகர்களும் ஒப்புக் கொண்டமையுடன், குறிப்பாக இலங்கை மியன்மார் நாடாளுமன்ற நட்புறவுக் குழுவிற்கு புத்துயிர் அளிப்பதன் முக்கியத்துவத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டினர்.

தேரவாத பௌத்த மதத்தை அடிப்படையாகக் கொண்ட நட்புறவுகளின் அடையாளமாக விளங்கும் இலங்கைப் பிக்குகளுக்கு உற்சாகமளிக்கும் முகமாக அக்கமஹா பண்டித பட்டம் ஆண்டுதோறும் வழங்கி வைக்கப்படுவதற்காக வெளிநாட்டு அமைச்சர் குணவர்தன மியன்மார் அரசாங்கத்துக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.



கொவிட்டுக்குப் பிந்தைய கட்டத்தில் பொருளாதார ஒத்துழைப்புக்கான சாத்தியமான பகுதிகளில் இரு நாடுகளும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்ட அமைச்சர், தேங்காய் தொழில்துறை, விவசாயம், பௌத்த, சுற்றுலா, ரப்பர் மற்றும் கப்பல் துறை போன்ற பகுதிகளை சுட்டிக்காட்டினார்.

இலங்கை வெளிநாட்டு அமைச்சு மற்றும் கொழும்பில் உள்ள மியன்மார் தூதரகம் ஆகியவற்றின் அதிகாரிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## இடுகம நிதியத்துக்கு மேலும் 20 லட்சம் ரூபா

இடுகம கொவிட் - 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கை டிராஸ் நிறுவனத்தால் 20 லட்சம் ரூபாவுக்கான காசோலை கடந்த திங்கட்கிழமை பிற்பகல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை கொவிட் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான பீ.பீ.ஈ. கருவிகளும் டிராஸ் நிறுவன பிரதிநிதிகளால் பிரதமரிடம் கையளிக்கப்பட்டன.

கொவிட் - 19 தொற்று நிலைமைக்கு மத்தியில் சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக எதிர்காலத்திலும், அரசாங்கத்துக்குத் தேவையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகவும் டிராஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த நிகழ்வில் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, மாகாண சபைகள் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க, இலங்கை டிராஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரகில் பெர்னாண்டோ, தலைமை செயல்பாட்டு முகாமையாளர் தர்ஷிகா அத்தநாயக்க, தலைமை நிர்வாக அதிகாரி மலித் ரணதேவ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ரிஷாத்தின் வீட்டுப் பணிப்பெண்ணான மலையகச் சிறுமி மரணம்; தொலைபேசி உரையாடல்களை பொலிஸாருக்கு வழங்குக

### நீதிமன்றம் உத்தரவு

மலையகச் சிறுமியின் மரணம் தொடர்பான சம்பவத்தில் சிலரின் தொலைபேசி உரையாடல் தொடர்பான தரவுகளை பொலிஸாருக்கு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிக்கமர்த்தப்பட்ட 15 வயதுச் சிறுமி உயிரிழந்தசம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது சிறுமியின் பிரேத பரிசோதனை அறிக்கை நீதிமன்றில் முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து, ரிஷாத் பதியுதீனின் மனைவி மற்றும் மேலும் 3 பேருக்கு இடையிலான தொலைபேசி உரையாடல் தொடர்பான தரவுகளையும், குறித்த சிறுமியை பணிக்கு அமர்த்திய முகவரின் வங்கி பணப்பரிமாற்ற விவரங்களையும் பொரளை பொலிஸாருக்கு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ரிஷாத் பதியுதீனின் இல்லத்துக்கு கடந்த 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் டயகம 3 ஆம் பிரிவில் இருந்து 15 வயதுச் சிறுமி வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.

கடந்த 03ஆம் திகதி தீக்காயங்களுடன் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 15ஆம் திகதி சிகிச்சைப் பலனின்றி அவர் உயிரிழந்தார். அதனைத் தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் குறித்த சிறுமி நீண்டகாலமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தமை தொடர்பில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, குறித்த சிறுமியின் மரணம் தொடர்பாக பொரளை பொலிஸாருடன் கொழும்பு தெற்கு சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொவிட்டுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தி சினோபோர்ம் தடுப்பூசி உருவாக்குகிறது

கொழும்பு, ஜூலை 20

இலங்கையில் 95 வீதத்துக்கும் மேற்பட்டோருக்கு சினோபோர்ம் தடுப்பூசி நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கியுள்ளமை இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர் வைத்தியர் சந்திம ஜீவந்தர இதனைத் தெரிவித்துள்ளார்.

20 முதல் 39 வயதுடையவர்களுக்கு செரோகான்வெர்ன் விகிதங்கள் (98.9) ஆகவும் 60 வயதுடையவர்களுக்கு செரோகான்வெர்ன் விகிதங்கள் (93.3) குறைவாக இருந்தன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த தடுப்பூசி டெல்டா மாறுபாட்டுக்கும் பீட்டா மாறுபாட்டுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்றும் குறித்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இருப்பினும் அல்பா மாறுபாட்டுக்கு எதிராக குறைந்த அளவிலான நோய் எதிர்ப்பு சக்தியையே வெளிப்படுத்தியதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.07.2021இல் வெளியிடப்பெற்றது.